# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 84/ந/2025
நாள் 30.05.2025

திரு.S.திருமூர்த்தி,
காரமடை, கோயம்புத்தூர் மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி,
மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, காமராஜ் சாலை, கதவு எண்.11/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.திருமூர்த்தி என்பவரின் 01.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.03.2025 அன்று பெறப்பட்டு, 84/ந/2025 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை, காமராஜ் சாலை, கதவு எண்.11/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.திருமூர்த்தி என்பவர் தமது 01.03.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

"நான் கோவை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாமில் மனு எண். / நாள் 271 –25.10.2024, மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட காவேரி தங்கும் விடுதி அனுமதிக்கு மாறாகவும் கூடுதல் ஆகவும் உள்ளது. சொத்து வரி குறைந்த அளவே விதிக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் புகார் அளித்திருந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேட்டுப்பாளையம் நகராட்சி கமிஷனர்க்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். வருவாய் இழப்பு ஏற்பட்டு கொண்டிருக்கிறது என்று தெரிந்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை ஆகையால் தாங்கள் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது அறிக்கை கோரி இம்முறைமன்ற நடுவ 21.03.2025 நாளிட்ட கடிதம் மூலம் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் கோரப்பட்டார்.

3. மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் தனது கடித ந.க.எண். 1353/2025/எப் 1, நாள் 17.04.2025–ல் தெரிவிக்கப்பட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

" இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட உதகை to கோயம்புத்தூர் மெயின் சாலையில் புல எண்.894/2, 316/1 & 3, 324/3–ல் திரு. ஜவஹர் விஸ்வநாதன் என்பவர் வணிக கட்டிடத்துடன் காவேரி இன்டர்நேஷனல் தங்கும் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு க.வி.எண்.66/86/F1 மற்றும் க.உ.எண்.48/86/F1 என்ற எண்ணில் 16.05.1988ல் கீழ்கண்டவாறு அனுமதி பெற்றுள்ளார்.

| | |
|---|---|
| 1.தரை கீழ் தளம் | 214 ச.மீ. |
| 2.தரை தளம் | 238 ச.மீ. |
| 3.முதல் தளம் | 224 ச.மீ. |
| 4.இரண்டாம் தளம் | 224 ச.மீ. |
| 5.மூன்றாம் தளம் | 224 ச.மீ. |
| 6.நான்காம் தளம் | 43 ச.மீ. |

மேற்கண்ட அளவுகளில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இட ஆய்வின்போது மனுதாரர் மனை இடத்தில் கீழ்கண்டவாறு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளார்.

| | |
|---|---|
| 1.தரை தளம் | 353 ச.மீ. |
| 2.முதல் தளம் | 353 ச.மீ. |
| 3.இரண்டாம் தளம் | 353 ச.மீ. |
| 4.மூன்றாம் தளம் | 353 ச.மீ. |
| 5.நான்காம் தளம் | 353 ச.மீ. |

மனையிடத்தில் அனுமதிக்கப்பட்ட அளவுகளின்படி பக்க திறவிடங்கள் விடப்படவில்லை. மேலும், வாகன நிறுத்துமிடம் வரைபடத்தின்படி விடப்படவில்லை.

ii)மேற்படி மனையிடத்தின் பின்பகுதியில் வணிக உபயோகமாக தங்கும் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு திரு.ஜவஹர் விஸ்வநாதன், என்பவர் கீழ்கண்டவாறு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளார்.

| | |
|---|---|
| 1.தரை தளம் | 46.45 ச.மீ. |
| 2.முதல் தளம் | 46.45 ச.மீ. |

3. இரண்டாம் தளம் – 46.45 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண்.122/2012/F1 மற்றும் கட்டிட உரிம எண்.161/2012/F1 என்ற எண்ணில் 20.06.2012 அனுமதி பெற்றுள்ளார். மேற்படி இடத்தில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் தரைதளத்தில் 197 ச.மீ. முதல் தளத்தில் 197 ச.மீ. இரண்டாம் தளத்தில் 197 ச.மீ. பரப்பளவிலும் அனுமதியின்றி மூன்றாம் தளத்தில் 197 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டு பணி பாதியில் நிறுத்தம், மேலும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தின் உயரம் அமைக்கப்படவில்லை என்ற காரணத்தில் மனுதாரர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் 1971ம் வருடத்திய பிரிவு 56, 57ன் கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிட படிவம்–I மற்றும் II அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

<u>சொத்துவரி தொடர்பான விவரங்கள் கீழ்கண்டவாறு:</u>

1. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17, மெயின் ரோடு, கதவு எண்கள். 1A முதல் 4E வரை திரு.ஜவஹர் விஸ்வநாதன், திருமதி.பிரேமலதா, செல்வி.அனுஸ்ரீகா என்பவர்களின் பெயரில் சொத்துவரி பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

   வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விபரம்.

| வரி விதிப்பு எண். | பெயர் | கதவு எண். | வரி நிர்ணயம் செய்யப்பட்ட கட்டிடத்தின் அளவு | கட்டிடத்தின் தன்மை | ஆய்வு செய்யப்பட்டபோது கட்டிடத்தின் அளவு | வித்தியாசம் |
|---|---|---|---|---|---|---|
| 074/017/900084 | திரு.ஜவஹர் விஸ்வநாதன் திருமதி. பிரேமலதா, செல்வி.அனுஸ்ரீகா | 1 | 381 | ஆர்.சி.சி. | 381 | 0 |
| 074//017/900085 | | 2 | 1000 | ஆர்.சி.சி. | 1000 | 0 |
| 074/017/900086 | | 3 | 400 | ஆர்.சி.சி. | 400 | 0 |
| 074/017/900087 | | 3A | 400 | ஆர்.சி.சி | 400 | 0 |
| 074/017/900088 | | 3B,3C | 8608 | ஆர்.சி.சி | 8608 | 0 |
| 074/017/900089 | | 3D | 400 | ஆர்.சி.சி | 400 | 0 |
| 074/017/900090 | | 3E | 400 | ஆர்.சி.சி | 400 | 0 |
| 074/017/900592 | | 1C | 170 | ஆர்.சி.சி | 170 | 0 |
| 074/017/900593 | | 1D | 1050 | ஆர்.சி.சி | 1050 | 0 |
| 074/017/900604 | | 3B1 | 128 | ஆர்.சி.சி | 128 | 0 |
| 074/017/900761 | | 4C | 96 | ஆர்.சி.சி | 96 | 0 |
| 074/017/900762 | | 4C-1 | 336 | ஆர்.சி.சி | 336 | 0 |
| 074/017/900590 | | 1A | 38 | ஆர்.சி.சி | 38 | 0 |
| 074/017/900591 | | 1B | 176 | ஆர்.சி.சி | 176 | 0 |
| 074/017/900091 | | 4 | 400 | ஆர்.சி.சி | 400 | 0 |
| 074/017/900092 | | 4A4B | 800 | ஆர்.சி.சி | 800 | 0 |
| 074/017/900646 | | 2A | 5830 | ஆர்.சி.சி | 5830 | 0 |
| 074/017/900973 | | 4E | 820 | ஆர்.சி.சி | 820 | 0 |
| 074/017/900974 | | 4D | 160 | ஏ.சி.சி | 160 | 0 |
| 074/017/900988 | | 1F | 3894 | ஆர்.சி.சி | 3894 | 0 |

மேற்காண் வரிவிதிப்பு எண்கள் உள்ள கட்டிடத்தை வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் நேரடி கள ஆய்வு பணி செய்யப்பட்டதில் நிலைக்கட்டிடத்தில் உள்ள அளவிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவையின்றி கேட்பு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளது. அதனால் நகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பு இல்லை என்ற விவரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு.S.திருமூர்த்தி என்பவரையும், எதிர்மனுதாரரான மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் மற்றும் காவேரி லாட்ஜ் மேலாளர் ஆகியோரை 05.05.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக விருந்தினர் மாளிகையில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவ 23.04.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.திருமூர்த்தி 05.05.2025 ம் தேதிய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட காவேரி தங்கும் விடுதி போதிய பார்க்கிங் வசதி செய்து தரப்படவில்லை. அவசர கால வசதி, வெளியேறும் வழி செய்து தரப்படவில்லை.

சொத்துவரி குறைந்த அளவே விதிக்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நகராட்சியினிடம் ஆர்.டி.ஐ. மூலம் தகவல் கோரப்பட்டது. இருப்பினும் இது தொடர்பாக நகராட்சியிலிருந்து கிடைக்கப்பெற்ற பதிலில் தெளிவான விளக்கம் தரப்படவில்லை.

6. மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையாளர் மற்றும் உதவி நகர்ப்புற திட்டமிடுநர் ஆகியோர் 05.05.2025 அன்று நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளனர்.

"மனுதாரர் தெரிவித்துள்ள காவேரி லாட்ஜ் கட்டிடத்தை நகராட்சியின் மூலம் கள ஆய்வு செய்யப்பட்டது. மேற்படி கட்டிடம் 20 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டுள்ள கட்டிடம் என்பது நேரடி விசாரணையின் மூலம் தெரிய வருகிறது.

நான்கு கார்கள் பார்க்கிங் செய்து கொள்ளும் அளவிற்கு பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளது. அவசர கால வழியைப்பொறுத்தவரை மின்தூக்கி மற்றும் படிக்கட்டுக்கள் வசதி (Stair case) செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்திற்கு சொத்து வரி சரியான முறையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனையிடத்தின் பின்பகுதியில் வணிக உபயோக தங்கும் விடுதி கட்டிடம் கட்டுவதற்கு திரு.ஜவஹர் என்பவர் கீழ்க்கண்டவாறு கட்டிட அனுமதி பெற்றுள்ளார்.

| | |
|---|---|
| 1. தரை தளம் | 46.45 ச.மீ. |
| 2. முதல் தளம் | 46.45 ச.மீ. |
| 3. இரண்டாம் தளம் | 46.45 ச.மீ. |

பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண்.122/2012/எப்1 மற்றும் கட்டிட உரிம எண்.161/2012/எப்1 என்ற எண்ணில் 20.06.2012–ல் அனுமதி பெற்றுள்ளார். மேற்படி இடத்தில் அனுமதிக்கு மாறாகவும் கூடுதலாகவும், தரை தளத்தில் 197 சதுர மீட்டர் முதல் தளத்தில் 197 சதுர மீட்டர், இரண்டாம் தளத்தில் 197 சதுர மீட்டர் பரப்பளவிலும் கட்டிடம் கட்டப்பட்டு பணி பாதியில் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி கட்டிடத்தின் உயரம் அமைக்கப்படவில்லை என்ற காரணத்தினால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56,57ன் கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிட படிவம்–I மற்றும் படிவம்–II அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது என்ற விவரத்தினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. காவேரி லாட்ஜ் உரிமையாளரின் சார்பாக மேற்படி லாட்ஜ் மேலாளர் திரு.சிக்கந்தர் பாஷா என்பவர் 05.05.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

" எங்களது காவேரி லாட்ஜ் கட்டிடத்தில் 20 கார்கள் பார்க்கிங் செய்து கொள்ளும் அளவிற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு மனுதாரரின் புகார் மனுவின் நகல் வழங்கப்படவில்லை. அழைப்பாணை மட்டும் பெறப்பட்டுள்ளது. எனவே எங்களுக்கு மனுதாரரின் மனுவின் நகலையும், விசாரணைக்கு வேறு ஒரு நாளை எங்களுக்கு வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. மேற்படி காவேரி லாட்ஜ் மேலாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவேரி லாட்ஜ் உரிமையாளருக்கு மனுதாரரின் புகாரின் நகலை இணைத்து, 19.05.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராக கோரப்பட்டார். அவருடன் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையருக்கும், மனுதாரரான திரு.S.திருமூர்த்திக்கும் 19.05.2025 தேதிய விசாரணைக்கு ஆஜராகும்படி அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9. மனுதாரர் 19.05.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்துள்ளார்.

"மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட காவேரி தங்கும் விடுதி போதிய பார்க்கிங் வசதி செய்து தரப்படவில்லை. காவேரி தங்கும் விடுதிக்கு குறைந்தளவே சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது. அவசர கால வசதி வெளியேறும் வழி செய்து தரப்படவில்லை. பார்க்கிங் பகுதியில் கட்டப்பட்டுள்ளது. வரைபடத்திற்கு மாறாக உள்ள கட்டிடத்தை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

10. மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் மற்றும் உதவி நகர்ப்புற திட்டமிடுநர் ஆகிய இருவரும் 19.05.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"1) மனுதாரர் தெரிவித்துள்ள காவேரி லாட்ஜ் கட்டிடத்தை நகராட்சியின் மூலம் கள ஆய்வு செய்யப்பட்டது. கட்டிடத்தின் மறு அளவீடு 27.03.2025 அன்று மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கட்டிடத்திற்கு 20633 சதுர அடி அளவிற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டிருந்தது. தற்போது கட்டிடத்தின் மறு சீராய்வின்படி 4874 சதுர அடிக்கு கூடுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டது. மேலும், Sec. 97 of Tamil Nadu Urban Local Bodies Act,1998ன்படி சொத்துவரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2) கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்தும் பொருட்டு காவேரி தங்கும் விடுதியின் அருகில் இடம் தேர்வு செய்து முறையாக பார்க்கிங் வசதி ஏற்படுத்திட அறிவிப்புகள் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3) மேலும், விடுதியின் பின்பக்கம் உள்ள கட்டிடத்திற்கு Section 56 & 57 and 80A of Tamil Nadu Town and Country Planning Act. 1971-ன் கீழ் முறையே படிவம் 1 முதல் 6

வரையிலான உரிய அறிவிப்புகள் வழங்கப்பட்டு, மேற்படி கட்டிடத்தினை மூடி முத்திரையிட தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4) மேற்படி இடமானது தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமைந்துள்ளதால், மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அதனை தெரிவித்திட தேசிய நெடுஞ்சாலை துறைக்கு உரிய கடிதம் அனுப்பப்பட்டு, விவரம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேற்படி விவரம், மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளனர்.

11. மேற்படி 19.05.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு காவேரி லாட்ஜ் உரிமையாளரோ அல்லது அவரது சார்பில் வேறு எவரும் ஆஜராகவில்லை.

12. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலங்கள், மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரின் அறிக்கை, அவரது வாக்குமூலங்கள், உதவி நகர்ப்புற திட்டமிடுநரின் வாக்குமூலங்கள், காவேரி லாட்ஜ் உரிமையாளரின் சார்பில் 05.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்ட லாட்ஜ் மேலாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் முழுமையாக இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தன்னுடைய மனுவில் தான் கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாமில் மனு எண். 271 நாள்.25.10.2024–ல், மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட காவேரி தங்கும் விடுதி அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் உள்ளது என்றும் சொத்துவரி குறைந்த அளவே விதிக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு உள்ளது எனவும் புகார் அளித்ததாகவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேட்டுப்பாளையம் நகராட்சி கமிஷனருக்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், வருவாய் இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிந்தும் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தை உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலங்கள் வாயிலாக மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள வணிக கட்டிடத்துடன் கூடிய காவேரி இன்டர்நேஷனல் தங்கும் விடுதி, மேட்டுப்பாளையம் நகராட்சியால் வழங்கப்பட்ட கட்டிட அனுமதிகளுக்கு மாறாக கட்டப்பட்டுள்ளது என்பதும், இது தொடர்பாக மேட்டுப்பாளையம் நகராட்சியினரால் கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1971 பிரிவு 56, 57–ன் கீழ் கட்டிடத்தினை மூடி முத்திரையிட்ட அறிவிப்புகள் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது அறிய முடிகிறது.

மேலும், காவேரி லாட்ஜ் கட்டிடத்தை நகராட்சியின் மூலம் கள ஆய்வு செய்து கட்டிடத்தின் மறு அளவீடு 27.03.2025 அன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி கட்டிடத்திற்கு 20633 சதுர அடி அளவிற்கு வரி விதிப்பு செய்யப்பட்டிருந்ததை, தற்போது கட்டிடத்தின் மறு சீராய்வின்படி 4874 சதுர அடிக்கு கூடுதலாக வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும், Sec.97 of Tamil Nadu Urban Local Bodies Act, 1998–ன்படி சொத்துவரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதையும் நகராட்சி ஆணையர் மற்றும் உதவி நகர்ப்புற திட்டமிடுநர் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

இந்நிலையில் மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் தனது 17.04.2025 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளவாறும், நகராட்சி ஆணையர் மற்றும் உதவி நகர்ப்புற திட்டமிடுநர் ஆகியோர் தங்களது 05.05.2025 மற்றும் 19.05.2025–ஆம் நாளிட்ட வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறும், உரிய தொடர்

நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2025** ஆம் ஆண்டு, மே திங்கள் **30–**ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.S.திருமூர்த்தி,
எண்.**11/1**, காமராஜ் சாலை,
காரமடை – **641 104.**
கோயம்புத்தூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
மேட்டுப்பாளையம் நகராட்சி,
மேட்டுப்பாளையம்.
கோயம்புத்தூர் மாவட்டம்.

3) உரிமையாளர்,
காவேரி லாட்ஜ்,
கதவு எண்.**3**B. 3E ஊட்டி மெயின் ரோடு,
மேட்டுப்பாளையம்.
கோயம்புத்தூர் மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75**, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75**, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – **600 028.**

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்